


தினப்புயல்
PTN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







## உயர்தரப் பரீட்சையுடன் தொடர்பான மேலதிக வகுப்புக்களுக்கு இன்று நள்ளிரவு முதல் தடை

*உயர்தரப் பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள் மற்றும் அனைத்து நடவடிக்கைகளும் இன்று (17) நள்ளிரவு முதல் பரீட்சை முடிவடையும் வரை தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. அதன்படி குறித்த பரீட்சையுடன் தொடர்புடைய கையேடுகளை விநியோகித்தல், விரிவுரைகள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்துதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.*

*இவற்றை மீறுபவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பாக தகவல் இருந்தால் பரீட்சை திணைக்களத்தின் 1911 என்ற உடனடி தொலைபேசி, 0112 785212 அல்லது 119 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்குமாறு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, க.பொ.த உயர்தரப் பரீட்சை இம்மாதம் 23 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வரை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இனிய பாரதி

(பாறுக் ஷிஹான்)




*அக்கரைப்பற்று நீதிமன்ற தீ வைப்பு சம்பவத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு பொலிஸாருக்கு எந்த நேரத்திலும் ஒத்துழைக்க தயாராகவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இனிய பாரதி என்றழைக்கப்படும் குமாரசாமி புஸ்பகுமார் தெரிவித்தார். அம்பாறை ஊடக அமையத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.*

*மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது. அக்கரைப்பற்று நீதிமன்றத்திற்கு தீ வைக்க வேண்டிய தேவை எனக்கில்லை. நீதிமன்ற களஞ்சியத்திற்கு தீ வைக்கின்ற அளவிற்கு சின்ன ஆளும் நான் அல்லர். நாட்டின் சட்டம் என்ன சொல்கின்றதோ நீதிமன்றத்திற்கு எதிரான செயற்பாட்டில் ஈடுபட்டால் சட்டம் என்ன கூறுகின்றது என்பதை நான் தெளிவாக அறிவேன். 2004 ஆம் ஆண்டு நாங்கள் கண்ட கண்டவர்களின் கதைகளை கேட்டு செயற்பட்ட காலங்கள் போல் தற்போது செயற்பட நாம் தயார் இல்லை. ஏனெனில் நாங்கள் முதிர்ச்சியடைந்துள்ளோம்.*

*அதில் அரசியல் மற்றும் சட்ட ரீதியாகவும் எமக்கு அனுபவம் உள்ளது. எனவே இவ்வாறான சம்பவத்துடன் பொய்யான பிரச்சாரங்களை என்னை தொடர்புபடுத்தவேண்டாம். உண்மை நிலையை அறிய வேண்டியவர்கள் எம்மை தொடர்புகொண்டு மக்களுக்கு தெளிவுபடுத்த முன்வரவேண்டும். அத்துடன் நான் இச்சம்பவம் இடம்பெற்ற பின்னர் தலைமறைவாகியதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அது உண்மைக்கு புறம்பானது என்பதுடன் இச்சம்பவத்திற்கு பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளதாக குறிப்பிட்டார்.*

## சமுர்த்தி பயனாளர்கள் உட்பட குறைந்த வருமானம் பெறும் 02 மில்லியன் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி வழங்க தீர்மானம்



சமுர்த்தி பயனாளர்கள் உட்பட குறைந்த வருமானம் பெறும் 02 மில்லியன் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோ அரிசியை 02 மாத காலத்திற்கு வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி. இதற்காக 40.000 மெ.டொ அரிசி தேவைப்படுவதோடு. அதற்கு அரசாங்கம் 61.600 மெ.தொ நெல்லைக் கொள்வனவு செய்யவேண்டும். சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் ஆதரவுடன் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் கீழ் தற்பொழுது காணப்படும் முறையை பயன்படுத்தி அடையாளங் காணப்பட்ட சமுர்த்தி பயனாளர்கள் உட்பட குறைந்த வருமானம் பெறுவோருக்கு அரிசி பகிர்ந்தளிக்கப்பட உள்ளதோடு பெண்கள் மற்றும் சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஊடாக இது தொடர்பில் மாவட்ட செயலாளர்களின் ஒருங்கிணைப்புடன் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட உள்ளன.

நெல் கொள்வனவுக்கு 6.200 மில்லியன் ரூபா. நெல் உலர்த்துவதற்கு 290 மில்லியன் ரூபா. கதிரடிக்கு வாடகைக்கு 590 மில்லியன் ரூபா. பொதிச் செலவுக்கு 200 மில்லியன் ரூபா. நெல் ஆலை உரிமையாளர்களுக்கு மேலதிக கொடுப்பனவாக 160 மில்லியன் ரூபா. அரிசி போக்குவரத்துச் செலவுக்கு 600 மில்லியன் ரூபா என்ற வகையில் 8.040 மில்லியன் ரூபா இதற்காக மதிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும். சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்களைப் பொறுத்து இத்திட்டத்திற்கு மதிப்பிடப்பட்ட செலவு மாறுபடும். தேவை ஏற்பட்டால். சுமார் ரூ.10.000 வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு இதற்குப் பயன்படுத்தப்படும்.

கமத்தொழில் திணைக்களம் மற்றும் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் தரவுகளின்படி. 2022/2023 பெரும்போகத்தில் நெல் பயிரிடப்பட்ட பரப்பளவு சுமார் 732.201 ஹெக்டெயராக இருந்ததோடு. மற்றும் எதிர்பார்க்கப்படும் நெல் விளைச்சல் 3.3 மில்லியன் மெ.தொன்களாகும். இதன் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய அரிசியின் அளவு சுமார் 2.2 மில்லியன் மெ.தொன்களாகும். நாட்டின் மாதாந்த அரிசித் தேவையான சுமார் 210.000 மெ. தொன்களைக் கருத்திற்கொண்டால். எதிர்வரும் பெரும்போகத்தில் அரிசி மேலதிக கையிருப்பு கிடைக்கலாம் என அவதானிக்கப்படுகின்றது.

அதன்படி. நெல் விவசாயி மற்றும் நுகர்வோர் இருவரையும் பாதுகாக்கும் வகையில். 2020/23 பெரும்போகத்தில் குறிப்பிட்ட அளவு நெல் கொள்முதல் செய்வதில் அரசாங்கம் தலையிடுவது அவசியம் ஆகும். மேலும். நாட்டில் நிலவும் கடினமான பொருளாதார நிலைமை காரணமாக. சமூகத்தின் குறைந்த வருமானம் பெறும் குழுக்களின் போசாக்கு மட்டத்தைப் பேணுவதற்கு ஆதரவளித்து இந்த நெருக்கடியின் பாதகமான விளைவுகளிலிருந்து அவர்களை பாதுகாக்க வேண்டும். சமுர்த்தி பயனாளர்கள் உட்பட சுமார் 2 மில்லியன் குடும்பங்களாக இருக்கும் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2023 வரை இவர்களுக்காக அரசாங்கம் மேலதிக நிதியை வழங்கியிருந்தாலும். இந்த குறைந்த வருமானம் பெறுபவர்களை சில காலம் கவனித்துக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. 2022/2023 பெரும் போகத்தில் நெல் அறுவடை முந்தைய பருவத்தை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதால். அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை பராமரிப்பதற்கு மேலதிக ஒத்துழைப்பை வழங்குவதற்காக குறிப்பிட்ட அளவு நெல்லைப் பயன்படுத்துவது பொருத்தமானது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானம் ஈட்டுவோர் பயனடைவார்கள்.

திறைசேரி செயலாளர். ஜனாதிபதி செயலக அதிகாரிகள். விவசாய அமைச்சின் செயலாளர். பொது நிர்வாகம். உள்நாட்டலுவல்கள். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்களின் செயலாளர். பெண்கள். சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளர் மற்றும் சகல மாவட்டச் செயலாளர்கள். சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் என்பன உத்தேச திட்டத்தை செயல்படுத்தும் முறை குறித்து ஆராயப்படும். உத்தேச அரிசி விநியோகப் பொறிமுறை தொடர்பில் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதுமட்டுமன்றி. விவசாயிகள் வாங்கும் நெல் வகைகளின் உற்பத்திச் செலவு. அரிசி கொள்வனவு செய்யும் உத்தரவாத விலை. நெல் ஆலை உரிமையாளர்களின் பங்களிப்பு. போக்குவரத்து முறை. கதிரடி வாடகை ஆகியவை குறித்து விரிவாக ஆராயப்படும்.

## 50 பெண்கள் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டதாக தகவல்

மேற்கு ஆப்பிரிக்க நாடான புர்கினா ஃபாசோவில் மத பயங்கரவாதிகளால் 50 பெண்கள் கடத்திச் செல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அந்த நாட்டின் வடக்கே சாஹெல் மாகாணத்திலுள்ள அர்பிந்தா நகரில் கடந்த 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் அந்தப் பெண்கள் கடத்தப்பட்டதாக மாகாண ஆளுநர் ரோடொல்ஃபோ சோர்கோ கூறினார்.

காட்டுப் பழங்களைப் பறிப்பதற்காக ஊருக்கு வெளியே உள்ள பகுதிக்கு அந்தப் பெண்கள் சென்றபோது அவர்களை பயங்கரவாதிகள் கடத்தியதாக அவர் கூறினார். அல்-கொய்தா மற்றும் ஐஎஸ் ஆதரவு பயங்கரவாதிகளின் பிடியில் புர்கினா ஃபாசோ பல ஆண்டுகளாக சிக்கித் தவித்து வருகிறது.



## மதுபானம் வாங்குவோருக்கான எச்சரிக்கை

நாட்டில் மதுபானம் வாங்குவோருக்கு முக்கிய அறிவித்தலை இலங்கை மதுவரித் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

மதுபானசாலைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள மதுபான போத்தல்களில் போலியான ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருப்பது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக மதுவரித் திணைக்களம் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

மதுபான வர்க்கத்தின் தரம் உள்ளிட்ட விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக இந்த ஸ்டிக்கர் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் அவ்வாறான ஸ்டிக்கர்கள் போலியான வகையில் ஒட்டப்படுகின்றமை சட்டத்துக்கு முரனானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜெர்மனி பாதுகாப்புத் துறை மந்திரி இராஜினாமா

உக்ரைன், ரஷியா இடையிலான போரில் அமெரிக்காவும், ஜெர்மனி உள்ளிட்ட பல ஐரோப்பிய நாடுகளும் உக்ரைனுக்கு ஆதரவாக இருந்து வருகின்றன. அந்த நாடுகள் உக்ரைனுக்கு அதிகளவில் ராணுவ உதவிகளை வழங்கி வருகின்றன.

இதற்கிடையே, ஜெர்மனி ராணுவ பெண் மந்திரியான கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட் உக்ரைன் ராணுவ வீரர்களுக்கு 5 ஆயிரம் ஹெல்மெட்டுகளை வழங்குவதாக சமீபத்தில் அறிவித்தார். ரஷிய படைகளை எதிர்த்து சண்டையிட உக்ரைனுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அதிநவீன ஆயுதங்களை வழங்கி வரும் நிலையில், உக்ரைன் வீரர்களுக்கு ஹெல்மெட் வழங்கும் ஜெர்மனி ராணுவ மந்திரியின் இந்த அறிவிப்பு கேலிக்குள்ளானது. சமூக வலைத்தளங்களில் பலரும் கிறிஸ்டின் லாம்ப்ரெக்டை கேலி செய்து பதிவுகளை வெளியிட்டனர்.

இந்த சர்ச்சை அடங்குவதற்குள் புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட் தனது மகனை ராணுவ ஹெலிகாப்டரில் அழைத்துச் சென்றது விமர்சனத்துக்கு உள்ளானது. இதையடுத்து, ஜெர்மனியின் ஆயுத படைகளை மேம்படுத்த தவறிவிட்டதாக கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட் மீது கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில், கிறிஸ்டின் லாம்ப்ரெக்ட் ராணுவ மந்திரி பதவியை நேற்று ராஜினாமா செய்தார். தனது ராஜினாமா கடிதத்தை பிரதமர் ஒலாப் ஸ்கோல்சிடம் வழங்கியதாகவும், அவர் அதை ஏற்றுக்கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகின.



## யாழில் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் நம்பிக்கை இல்லை என்கிறார் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் நம்பிக்கை இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றையதினம் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்திய பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கே எம்.ஏ சுமந்திரன் இவ்வாறு பதில் வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எந்த காலப்பகுதிக்குள் காணிகள் விடுவிக்கப்படும் என சொல்லவில்லை. 108 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கப்படலாம் என சொல்லுகின்றார்கள். உடனடியாக விடுவிக்கப்படலாம் என பல நாட்களாக சொல்கின்றார்கள். ஆனால் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அதனால் கூட்டத்தில் சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பாக எங்களுக்கு பெரிதாக நம்பிக்கை இல்லை என தெரிவித்துள்ளார்.



## வடக்கு - கிழக்கு, பொலனறுவையில் கைச் சின்னம்

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான சின்னம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தில் கை சின்னத்தில் மாத்திரம் தேர்தலில் போட்டியிட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு, புத்தளம், குருநாகல், மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் ஹெலிகொப்டர் சின்னத்தில் மாத்திரம் போட்டியிடவும் கட்சி தீர்மானித்துள்ளது.

நாட்டின் ஏனைய மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களில் கை சின்னம் மற்றும் ஹெலிகொப்டர் சின்னம் இரண்டையும் பயன்படுத்தி தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாக அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## பொது இடங்களில் முகக் கவசம் கட்டாயம் – கேரள அரசு

கேரளத்தில் பொது இடங்களில் முகக் கவசம் அணிவதை மாநில அரசு கட்டாயமாக்கியுள்ளது. கொரோனா தீநுண்மி தொடர்ந்து அச்சுறுத்தலாக உள்ளது. மேலும் நாடு முழுவதும் கொரோனா பாதிப்பு அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. எனவே கேரளத்தில் பொது இடங்களில் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வாகனங்கள், அரசுப் பேருந்துகளில் செல்லும்போதும் அனைவரும் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும். அனைவரும் தனிநபர் இடைவெளியை கடைப்பிடிக்க வேண்டும். இந்த உத்தரவு ஜன 12 முதல் ஒரு மாதத்துக்கு அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாரிசு : ஐந்து நாட்களில் ரூ.150 கோடி வசூல்

வம்சி இயக்கத்தில் நடிகர் விஜய் நடித்துள்ள திரைப்படம் "வாரிசு". இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக நடிகை ராஷ்மிகா மந்தனா நடித்துள்ளார். மேலும், பிரகாஷ்ராஜ், சரத்குமார், குஷ்பூ, ஷாம், யோகி பாபு உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

பெரும் எதிர்பார்ப்பில் உருவான இப்படம் கடந்த 11ஆம் திகதி ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் திரையரங்குகளில் வெளியானது. இதைத்தொடர்ந்து இப்படத்தின் தெலுங்கு பதிப்பான "வாரசுடு" கடந்த 14ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்நிலையில், "வாரிசு" படத்தின் வசூல் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம் வெளியான ஐந்து நாட்களில் உலகம் முழுவதும் ரூ.150 கோடியை வசூல் செய்துள்ளது.

இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. இந்த அறிவிப்பால் விஜய் ரசிகர்கள் உற்சாகத்தில் உள்ளனர்.